# கணினியில் தவழும் சிங்கப்பூர்த் தொடக்கநிலை மாணவர்களின் மின்னூல்கள்

திருமதி ரவீந்திரன் ஜெகஜோதி & திருமதி சுஜாதா
சூச்சின் தொடக்கப்பள்ளி (Shuqun Primary School), சிங்கப்பூர்

மாணவர்களின் புத்தாக்கத் திறனை மையமாக வைத்து அவர்களின் வயதிற்குட்பட்ட கற்பனையைக் கொண்டு கதையினை உருவாக்குதலும், மாணவர்களிடையே வாசிப்புப் பழக்கத்தைச் சுவராசியமான முறையில் மேம்படுத்துதலும், மாணவர்களின் புரிந்துணர்வை அவர்களுக்கு ஏற்ற நடவடிக்கைகளைக் கொண்டு அறிதலும் இப்பகிர்வின் நோக்கங்களாகும்.

இருபத்தியோராம் நூற்றாண்டுக் கல்வித் திறன்களில் ஒன்று கணினி. அத்திறன்களில் ஒன்று சுயகற்றலாகும். எங்கள் நாட்டில் கணினியைக் கொண்டு கற்பிப்பதற்கு அதிக முக்கியத்துவம் தரப்படுகிறது. பள்ளியில் பயிலும் ஒவ்வொரு மாணவரும் கணினித்திறன் பெற்றவர்களாகத் திகழ்வதால் நடவடிக்கைகளை அதனைச் சார்ந்தே அமைத்து வருகிறோம்.

எங்கள் மாணவர்கள் கேட்பதைக் கொண்டும் பார்ப்பதைக் கொண்டும் தங்கள் அனுபவங்களைச் சிறப்பாக வெளிப்படுத்தும் திறன் பெற்றவர்கள். அத்திறன்களை நாங்கள் வகுப்பறைக்குள் கட்டிப்போட விரும்பவில்லை. அந்த எழுத்திற்குத் தகுந்த அங்கீகாரத்தைப் பெற்றுத் தர வேண்டும் என்று நினைத்தோம். அவற்றை உலகறியச் செய்ய வேண்டும் என்பது எங்கள் பள்ளியின் குறிக்கோளாக இருந்தது. அந்தக் குறிக்கோளைச் செயற்படுத்தவே மின்னூல் தயாரிக்கும் முயற்சியில் இறங்கினோம்.

## அஞ்சல் மின்னூல் உருவாக்கும் மென்பொருள் (Anjal Ebook Creator)

எங்கள் மாணவர்கள் கணினியைப் பயன்படுத்திக் கற்றுக்கொள்வதில் ஆர்வம் கொண்டவர்கள். கணினித்திரையில் விரலைச் சொடுக்கிப் பக்கங்களைப் புரட்டி மின்னூல்கள் படிப்பதைத்தான் நம் இன்றைய மாணவர்கள் விரும்புகின்றனர். மாணவர்களின் கற்பனைக்கு வேலை கொடுக்க சிறுகதை எழுதும் பயிற்சியை

அளித்தோம். அதன்மூலம் சிறுகதை எழுதும் உத்திகளையும், அவற்றில் இடம்பெற வேண்டிய கூறுகளையும் மாணவர்களின் மனதில் பதியவிட்டோம். அதன்பின் பள்ளிச்சார்பில் தமிழில் மின்னூல் உருவாக்க மென்பொருளை (Ebook creator, Murasu Anjal) வாங்கி மாணவர்களுக்கு மின்னூல் உருவாக்கும் பயிற்சியையும் அளித்தோம். அப்பயிற்சியைத் தொடர்ந்து, மாணவர்கள் தாங்கள் எழுதிய கதைகளை MS Word docல் எளிய கட்டுரை அல்லது கதை வடிவில் தட்டச்சு செய்தனர். பின்பு அக்கதைகளுக்குப் பொருத்தமான வண்ணப்படங்களை இணையத்தில் தரவிறக்கம் செய்தோ அல்லது சொந்தமாக வரைந்தோ அவற்றைப் படவில்லைகளில் மாற்றி மின்னூல்களை உருவாக்கத் தொடங்கினர். அவர்கள் உருவாக்கிய மின்னூல்களைக் கையடக்க கணினிமூலம் (iPad) மற்ற மாணவர்கள் படிக்கவும் கருத்துகள் உரைக்கவும் வாய்ப்புகளை ஏற்படுத்தித் தந்தோம். தாங்கள் படித்த சக நண்பர்களின் கதைகளை விமர்சிப்பதன் மூலம் மாணவர்களுக்கு எழுதுவதில் விருப்பம் அதிகரித்தது. தொடக்கத்தில் சாதாரணமாக எழுதிவந்த மாணவர்கள் தங்கள் எழுத்துத்திறனை மேம்படுத்திக் கொள்ள நிறைய வாசித்தனர். கதைநூல்கள், கட்டுரைகள், செய்தித்தாள், இணையத்தில் வெளியிடப்படும் கதைகள், செய்திகள், தகவல்கள் முதலியவற்றைப் படிக்கும் பழக்கம் அவர்களிடம் அதிகரித்தது. அதன் பயனாக, மாணவர்கள் எழுதிய கதைகளின் தரம் உயர்ந்திருப்பதைக் காணமுடிந்தது.

## Mangoreader

முரசு அஞ்சல் மின்னூல் உருவாக்க வெற்றியைத் தொடர்ந்து பள்ளியில் அனைத்து மொழிகளில் மாணவர்களின் படைப்புகளை வெளியிட ஒரு தளத்தைத் தேடினோம். அந்தத் தேடலில் கிடைத்ததுதான் Mangoreader என்ற மின்னூல் உருவாக்கும் இணையத்தளம். பூனேயில் இருக்கும் Mangoreader என்ற நிறுவனம் எங்களுடன் இணைந்து செயல்பட இணங்கியது. இதனைத் தொடர்ந்து ஆங்கிலம், தமிழ், சீனம், மலாய் என்னும் நான்கு மொழிகளிலும் எங்கள் பள்ளி மாணவர்கள் எழுதிய கதைகளில்

தரமானவற்றைத் தேர்ந்தெடுத்தோம். எங்கள் மாணவர்களின் தேர்ந்தெடுக்கப்பட்ட கதைகளுக்குப் பொருத்தமான மின்னோவியங்கள் Mangoreader நிறுவனத்தினரே வரைந்து அதற்கேற்ற நடவடிக்கைகளையும் இணைத்து மின்னூல்களாக இணையத்தளத்தில் பதிவேற்றமும் செய்தனர்.

இத்தளத்தில் அமைந்துள்ள ஒரு சில நடவடிக்கைகள். அசைவூட்டப்பட்ட படங்கள், படத்துண்டுகளை/சொற்களைப் பொருத்தமாக இணைத்தல், குரல்பதிவு செய்தல், தெரிவுசெய்யும் வகையில் அமைந்த கூறுகள் (Read to me, Read by myself, Read with games) கதைக்கு ஏற்ற இருவழித்தொடர்பு மொழி நடவடிக்கைகள் (எ-டு) தெரிவுவிடை, இணைத்தல், நிரப்புதல் போன்றவை மாணவர்களின் ஆர்வத்தைத் தக்க வைக்க உதவியது.

தற்போது எங்கள் மாணவர்கள் எழுதிய பதினைந்துக்கும் மேற்பட்ட கதைகள் இத்தளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டு கணினி உலகில் பவனி வருகின்றன என்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். மின்னூல்களாக வெளிவந்த கதைகளையும் வகுப்பில் வாசிப்பு, கருத்தறிதல் ஆகிய பாடங்களைக் கற்பிக்க கூடுதல் வளங்களாகப் பயன்படுத்துகிறோம்.

## இருவழித்தொடர்பு மின்னூல்

மின்னூல்களைத் தொடர்ந்து மாணவர்களின் ஆர்வத்தை மேலும் தக்கவைத்துக் கொள்ள உருவானதுதான் இருவழித்தொடர்பு மின்னூல். மாணவர்களின் ஆழ்ந்த படிப்புக்கு வாய்ப்பளித்தல்; பாடப் புரிந்துணர்வு மேம்படுதல்; சொல்வளம் பெருகுதல்; சிந்தித்துப் பதிலளித்தல்; சுய கற்றலை ஊக்குவித்தல் (Self Directed Learning); எழுதுவதற்குத் தன்னம்பிக்கை ஏற்படுதல்; கற்றலில் போட்டித்தன்மையுடன் செயற்படுதல்; பொது அறிவை வளர்த்துக்கொள்ளுதல்; ஒவ்வொரு மாணவரும் ஈடுபாடு காட்டுதல்; விளையாட்டோடு கூடிய கற்றலை உருவாக்கித் தருதல் இவைகள்தான் இருவழித்தொடர்பு மின்னூல் உருவாகக் காரணங்களாக அமைந்தன.

அனைத்து தர மாணவர்களின் சுய கற்றலை (Self Directed Learning) மேம்படுத்தும் நோக்கத்தில் எங்கள் ஆசிரியர்கள் மாணவர்களின் மின்னூல்களை இருவழித்தொடர்பு மின்னூல்களாக மாற்றியிருக்கிறார்கள். இருவழித்தொடர்பு மின்னூலில் தற்போது ஆசிரியர்கள் மாணவர்களுக்குப் பயிற்சி நடத்தி வருகின்றனர். அதில் உருவாக்கப்படும் மாணவர்களின் கதைகள் இனிவரும் வருடங்களில் கீழ்த் தொடக்கநிலை மாணவர்களுக்கு வாசிப்புப் பயிற்சியாக அளிக்கப்படும்.

குழந்தை இலக்கியங்களைப் பருகக்கூடியவர்கள் நம் குழந்தைகளே. அவர்களைவிட்டே இலக்கியங்கள் படைத்தால் என்ன? என்ற கேள்விக்கு பதில்தான் இந்த மின்னூல்கள். மாணவர்களின் மனவியலைப் படித்த ஆசிரியர்களோடு மாணவர்களும் கைக்கோர்த்தால் குழந்தை இலக்கியத்திற்கு குறைபாடு வராது என்பதில் எங்களுக்கு எள்ளவும் சந்தேகம் இல்லை. அதற்கு எங்கள் மாணவர்களே ஒரு சிறந்த எடுத்துக்காட்டு. மாணவர்கள் தங்கள் சொந்த எழுத்துப் படைப்புகளை இணையத்தில் படித்துப் பெருமிதம் கொள்கின்றனர். சக மாணவர்களின் கதைகளைப் படித்துத் தாங்களும் சிறப்பாக எழுத வேண்டும் என்று தன்முனைப்பு ஏற்படுவதைக் கண்கூடாகக் காண முடிகின்றது. இந்த மின்னூல் வெளியீட்டில் மூன்று தளங்களிலும் எங்கள் பள்ளிக்கே முதலிடம் என்பதையும், எங்கள் மாணவர்கள் வளரும் எழுத்தாளர்களாகப் பாரினில் பவனி வருவதையும் எண்ணி எங்கள் பள்ளி கர்வம் கொள்கிறது.